Das Lehrstellenprojekt 16+ der Schweizerischen Konferenz der Gleichstellungsbeauftragten motiviert Mädchen zu einer offenen Berufswahl und zeigt Knaben erweiterte Lebensperspektiven.

Ein Projekt im Rahmen des Lehrstellenbeschlusses 2 des Bundesamtes für Berufsbildung und Technologie BBT.

# பாடசாலையிலிருந்து தொழிலுக்கு

**பெற்றோருக்கான தகவல் (தமிழ்)**

அன்புள்ள பெற்றோருக்கு

உங்கள் மகள் அல்லது மகன் 7ம், 8ம், 9ம் அல்லது 10ம் வகுப்பில் படிக்கின்றார். உங்கள் மகன் அல்லது மகள் தங்களிற்கு ஒரு தொழிற்கல்வியை அல்லது உயர்கல்வி கற்கும் பாடசாலையைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள்.

தொழிற்கல்வி உலகில் வெற்றிகரமாக நுழைவதற்கு தொழிற் கல்விபற்றிய சரியான தெளிவும் நன்கு சிந்தித்துத் தொடரும் திட்டங்களும் முக்கியமானவையாகும். குறிப்பாக இளம்பெண்கள் தங்களுக்குரிய எதிர்காலத் தொழிற்கல்வியை சரியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு திறந்தமனத்துடன் தொழிற் கல்வி பற்றிய விடயங்களை அறிந்துகொள்ளல் அவசியம்.

இளம்வயதினர் ஓர் தொழிற்கல்வியைத் தேர்ந்தெடுப்பதற்கு பாடசாலையும், தொழிற்கல்வி ஆலோசனை நிறுவனங்களும் உதவிபுரிகின்றன. ஆனால் சுயமுயற்சியும் முடிவுகளை எடுக்கும் உரிமையும் சம்பந்தப்பட்டவர்களையே சாரும். ஆகவே உங்கள் மகன் அல்லது மகள் தமக்குரிய தொழிற்கல்வி பயிலும் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும்வரை சுயமுயற்சி மிகவும் அவசியம்.

அனேகமானவர்களுக்கு இது கடினமானது. அனேகமானவர்கள் சுயமுயற்சியில் ஈடுபடாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஆகவே தாயாரும் தந்தையும் தங்கள் பிள்ளைகளுக்கு உதவுவது மிகவும் முக்கியமானதாகும்.

**பாடசாலை எவ்வாறு உதவுகின்றது?**
பாடசாலை 8ம் 9ம் வகுப்பிற் கல்விகற்கும் மாணவர்களை அவர்களுக்குரிய தொழிற்கல்வியைத் தேர்ந்தெடுப்பதற்கு அல்லது உயர்கல்விப்பாடசாலையைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆயத்தம் செய்கின்றது. மேலும் இவ்வாயத்தங்கள் பற்றிய தகவல்களை பாடசாலை ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**தொழிற்கல்வி ஆலோசனை நிறுவனம் எவ்வாறு உதவுகின்றது?**
தொழிற்கல்வி ஆலோசனை நிறுவனங்கள் தொழிற்கல்வி பற்றியும் அவற்றை பயிலக்கூடிய இடங்கள் பற்றிய தகவல்களையும் வழங்குகின்றது. பிரத்தியேக ஆலோசனைகளை மாணவர்கள் இவ் ஆலோசனை நிறுவனங்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

# இளம்வயதினர் சுயமாக என்ன செய்யவேண்டும்?

**ஆலோசனையை நாடுதல் உதவியை ஏற்றுக்கொள்ளுதல்**

லின்டா பொலிமெக்கானிக்கர் எனும் தொழிற்கல்வியைத் தேரிவுசெய்ய விரும்புகின்றாள். ஆனால் அவளின் தந்தையார் பொலிமெக்கானிக்கர் என்பது ஆண்களுக்குரிய தொழில் என்றும் லிண்டா நாள் பூராகவும் ஆண்களுடன்தான் வேலை செய்யவேண்டும் என்றும் கருதுகின்றார். அதுமட்டுமன்றி லின்டா தனது திறமையை வெளிக்காட்ட சக தொழ–லாளர்களை விட மேலதிகமா வேலை செய்ய நேரிடும் எனவும் மேலும் எமது கலாச்சாரத்தில் பெண்கள் யாருமே பொறியியல் துறையில் வேலை செய்யவில்லை என்றும் கூறினார். ஆயினும் லிண்டா மனம் தளராது இத் தொழிலைப் பழகிப்பார்ப்பதற்கு விண்ணப்பித்தாள்.
இத்தொழிலை ஒரு கிழமை பழகிப்பார்த்த பின்னர் லிண்டா தந்தையாரின் கருத்து சரியானது என ஒத்துக் கொண்டாள். இருப்பினும் தான் இத் தொழிற் தேர்ச்சிக்கே விண்ணப்பிக்கப் போவதாகக் கூறியது மட்டுமன்றிப் பெற்றோரின் உதவியையும் நாடினாள். ஏனெனில் அவளுக்கு இரும்புடனும் இயந்திரங்களுடனும் வேலைசெய்வது பிடித்திருந்தது,

## தொழில்களைத் தெரிந்து கொள்ளுதல்

**என்ன தொழில்கள் உள்ளன? அங்கு ஒருவர் என்ன செய்கின்றார்? எத்தகைய திறமைகள் தேவை?**

- ✓ தொழிற்கல்வி ஆலோசனை மையத்திற்குச் சென்று தொழில் சம்பந்தமான விடயங்களை வாசித்தலும் அவை பற்றிய வீடியோக்களைப் பார்வையிடல்.
- ✓ ஆலோசனைமையத்திலுள்ள ஆலோசகரின் உதவியை நாடுதல்
- ✓ தொழிற்கண்காட்சிகளைப் பார்வையிடல்
- ✓ தொழிலைப் பழகிப்பார்த்தல்

## தம்மிடமுள்ள திறமைகளைத் தாமாகவே அறிந்து தமக்குரிய தொழிற்கல்வியை அல்லது உயர்கல்வியை தேர்ந்தெடுத்தல்

**என்னால் பாடசாலையில் எதை நன்றாகச் செய்யமுடியும்? எனது பொழுதுபோக்குகள் என்ன? நான் எனது குடும்பத்தாரிடமிருந்து எதைக் கற்றுள்ளேன்? உதாரணமாக பலதரப்பட்ட மொழிகளைப் பேசுதல், வீட்டு உபகரணங்களைத் திருத்துதல், குழந்தைகளைப் பராமரித்தல், சாமான் வாங்குதல் போன்றன. எந்தத் தொழிற்கல்வி அல்லது உயர்கல்வி எனக்குப் பொருத்தமானது?**

- ✓ பெற்றோருடன் தொழில்களைப்பற்றிக் கதைத்தல். எந்தத் தொழில் எனக்குப்பொருத்தமானது எனக் கேட்டல்.
- ✓ ஆசிரியருடன் உரையாடல். எனக்கு ஜேர்மன், பிரெஞ்சு, கணிதம் போன்ற பாடங்களில் போதியளவு திறமையுள்ளதா? எந்தப் பாடங்களில் எனக்கு தரம் குறைவாக உள்ளது? நான் பாடசாலையில் 9ம் 10ம் வகுப்பிற்குப் பின்னர் எனது தொழிற்கல்வியை அல்லது உயர்கல்வியைத் தேர்ந்தெடுக்க என்ன செய்யவேண்டும்.
- ✓ தொழிற்கல்வி ஆலோசனை மையத்துடன் ஓர் நேரத்தைப் பதிவுசெய்து பின்வரும் விடயங்கள் பற்றி உரையாடல். எனக்குரிய தொழிற்கல்வியைத் தேர்ந்தெடுக்க நான் என்னைச் சரியாக ஆயத்தப்படுத்தியுள்ளேனா? ஏனக்கு ஏதாவது பாடத்தில் தரம் குறைந்திருப்பின் அதை நிவர்த்தி செய்ய நான் என்ன செய்யவேண்டும்.
- ✓ எனக்குரிய சரியான தொழிற்கல்வியை அல்லது உயர்–கல்வியைத் தேர்ந்தெடுப்பதுடன் 1 அல்லது 2 மாற்றுவழி முறைகளையும் தேர்ந்தெடுத்தல்.

**விசாரித்தலும் அதன்மூலம் கற்றுக்கொள்ளலும்**

டியான்கோ குறுகிய காலமாகத்தான் சுவிஸில் வசித்தான். அவன் Sek. C பாடசாலைக்குச் சென்றான். இதனால் இவனுக்கு தனக்குரிய தொழிற்கல்வியைத்தெரிவுசெய்வது கடினமாக இருந்தது. இவனின் இலட்சியம் இரசாயன ஆய்வுகூட உதவியாளர். இவனது பாடசாலைத் தரத்தில் பின்னடைவு இருந்தபோதிலும் அவன் இத் தொழிற்கல்வியைக் கற்பதற்குரிய நிறுவனம் ஒன்றிற்கு விண்ணப்பித்தான். இந்நிறுவனம் அவனுக்கு தொழிற்தேர்ச்சி ஆரம்பக்கல்வி பயிலுவதற்கான (Anlehr-stelle) அனுமதியை வழங்கியது. அவனது பெற்றோரும் அவனை இந்தக் கல்வியை பயிலும்படி ஆலோசித்தனர். ஏனெனில் இக்கல்வி ஓர் மாணவனுக்கு தொழிற்கல்வி கற்பதற்குரிய ஓர் ஆரம்பப்படியாகும். ஆனால் டியான்கோ இந்தக் கல்வியைக் கற்பதற்கு விரும்பவில்லை. ஏனெனில் அவன் தனக்குத் தேவையான தகைமை உள்ளது அதனால் தான் ஆரம்பக்கல்வி பயிலாமல் நேரடியாக இரசாயன ஆய்வுகூட உதவியாளர் எனும் தொழிற்கல்வியைத் தொடரலாம் எனக் கருதினான். பேற்றோருடனான நீண்டநேர விவாதத்தின் பின்னர் டியான்கோ தனது தொழிற்தேர்ச்சி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தனக்கு இத்தொழிற்கல்வியை பயிலுவதற்கு என்ன தகைமை குறைவாகவுள்ளதென வினாவினான். அவனுக்கு கணிதத்திலும் ஜேர்மன் மொழியிலும் தரம் குறைவாக உள்ளது எனும் பதில் கிடைத்தது.

அவனது பெற்றோர்கள் அவனது கல்வியை மேம்படுத்த அவனைத் தனியார் பாடசாலை ஒன்றில் சேர்த்தார்கள். ஒரு சில மாதங்களின் பின் டியான்கோ மீண்டும் ஓர் பரீட்சை எழுதித் தனது தொழிற்பயிர்ச்சி நிறுவனத்திற்குத் தன் திறமையை வெளிக்காட்டி இரசாயன ஆய்வுகூட உதவியாளர் எனும் தொழிற்கல்வியை அந்நிறுவனத்திலேயே கற்பதற்கான அனுமதியையும் பெற்றான்.

**ஓர் தொழிற்கல்வியைப் பயிலுவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தல்**
**(பொதுவாக 9ம் வகுப்பின் இலையுதிர்காலப்பகுதியில்)**

- ✓ எனக்குரிய தொழிற்கல்வியைப் பயிலுவதற்குரிய நிறுவனங்கள் எங்கேயுள்ளன?
- ✓ உயர்கல்விக்குரிய பாடசாலை எங்குள்ளது?
- ✓ ஓர் தொழிற்தேர்ச்சி கற்பதற்குரிய இடத்தைப் பெற்றுக்கொள்ள என்ன செய்யவேண்டும்?

**இரண்டாவது தடவை**

ஹைரி கட்டட நிர்மாண வரைபடவியலாளர் எனும் தொழிற்கல்வியைக் கற்கவிரும்புகின்றாள். அவளது தந்தை தனக்குத் தெரிந்தவரின் நண்பர்மூலம் அவளுக்கு தொழிற்கல்வியைப் பழகிப் பார்ப்பதற்கான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து கொடுத்தார். கட்டடவியலாளர் இவளுக்குத் திறமையுள்ளது என்றும் ஆனால் இவள் தானாகவே எந்தக் கேள்வியும் கேட்பதில்லையென்றும் தாங்கள் எதையாவது விளங்கப் படுத்தும்வரை காத்திருக்கின்றாள் எனவும் குறைகூறினார். அவளின் தந்தை ஏமாற்றமடைந்தார். அடுத்து ஹைரி வீட்டுப்பராமரிப்புத் தொழிற்கல்விக்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்தாள். அங்கு அவள் 4 குழந்தைகளைப் பராமரித்தாள். அவள் இத்தொழிற்கல்வி பரவாயில்லையென அபிப்பிராயப்பட்டாள். ஆனால் நீண்டகாலத்திற்கு இத்தொழிலில் நிலைத்திருக்கமுடியாதெனவும் தனது கனவுத்தொழிலான கட்டட நிர்மாண வரைபடவியலாளர் எனும் தொழிற்கல்வியைக் கற்கத் தன்னை ஆயத்தப்படுத்த வேண்டும் என்றும் விரும்பினாள். அவள் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கட்டடக்கலைஞருடன் தொடர்பு கொண்டு தான் இன்னொருதடவை தொழிலைப்பழகிப்பார்க்க விரும்புவதாகக் கூறினாள். அவர் தன்னிடம் தற்போது தொழிற்கல்வி பயில்வதற்கான இடம் இல்லையெனக் கூறினார். ஆனால் அவர் அவள் தன்னிடம் வேலையைப் பழகிப் பார்ப்பதற்கு ஒத்துக்கொண்டார். இம்முறை ஹைரி தனது வேலைகளைச் சரிவரச் செய்தாள். இதனால் அவளின் தந்தை மட்டுமன்றி கட்டிடக்கலைஞரும் அவள் தனக்குரிய தொழிற்கல்வி பயிலுமிடத்தைத் தேர்ந்தெடுக்க உதவினார்கள். இப்போது அவள் கட்டட நிர்மாண வரைபடவியலாளர் எனும் தொழிற்கல்வியை பயின்றுகொண்டிருக்கின்றாள்.

**ஒரு தொழிற்கல்வியை அல்லது உயர் கல்வியை தெரிவுசெய்வதற்கு நேரம் தேவை. உங்கள் மகனிற்கு அல்லது மகளிற்கு உங்கள் உதவி அவசியம்.**

## நீங்கள் உங்கள் மகளிற்கு அல்லது மகனிற்கு உதவமுடியும்

பெற்றோராகிய நீங்கள் உங்கள் மகள் அல்லது மகன் தங்களுக்குரிய தொழிற்கல்வியையும் அவற்றிற்குரிய நிறுவனத்தையும் தேர்ந்தெடுக்கப் பல வழிகளில் உதவமுடியும்.

### பாடசாலையில் பெற்றோர்களுக்கென நடைபெறும் நிகழ்வுகழில் கலந்துகொள்ளுதல்

பெற்றோர்களுக்கான நிகழ்வுகளில் நீங்கள் தொழிற்கல்வி பற்றியும் தொழிற்கல்விகற்குமிடத்தைத் தேர்ந்தெடுத்தல் போன்ற முக்கியமான தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் சுவிஸ் நாட்டின் தொழிற்கல்விமுறை பற்றியும் உங்கள் மகளுக்கு அல்லது மகனுக்கு அவர்களுக்குரிய தொழிற்கல்வியைத் தேர்ந்தெடுப்பதில் நீங்கள் எவ்வாறு உதவமுடியும் என்பது பற்றியும் அறிந்துகொள்ளலாம். அத்துடன் உங்கள் பிள்ளைகளைப்போல் தொழிற்கல்வியை தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்திலுள்ள ஏனைய பிள்ளைகளின் பெற்றோர்களின் அனுபவங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

### உங்களுக்குத் தெரிந்தவர்களுடனான தொடர்புகளை பயன்படுத்துங்கள்

உங்கள் சகதொழிலாளிகள், மன்ற உறுப்பினர்கள், சங்க உறுப்பினர்கள் மேலும் தெரிந்தவர்கள் அனைவருக்கும் உங்கள் மகள் அல்லது மகன் ஓர் குறிப்பிட்ட தொழிற்கல்வி கற்குமிடத்தைத் தேடுவதாகத் தெரிவியுங்கள். சிலவேளைகளில் அவர்களில் யாருக்காவது உங்கள் பிள்ளை தேடுகின்ற தொழிற்கல்வி நிறுவனங்கள் அல்லது அந்நிறுவனங்களுடன் தொடர்புடையவர்களைப் பற்றித் தெரிந்திருக்கக்கூடும்.

### மனத்தைரியம்

தொழிற்கல்வி கற்கும் நிறுவனங்களின் அனுமதி கிடைப்பது என்பது இன்றைய பொருளாதாரச் சூழலில் இலகுவானதல்ல. ஆகவே உங்கள் மகளுக்கு அல்லது மகனுக்கு தைரியமும் பொறுமையும் அவசியம். தொழிற்கல்வி தேடுவதில் அவர்கள் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். அவர்களின தொழிற்கல்வி பயில்வதற்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றபோது அவர்களுக்கு ஆறுதல் கூறி உங்கள் புரிந்துணர்வைக் காட்டுங்கள். மேலும் அவர்கள் மற்றுமொரு நிறுவனத்திற்கு விண்ணப்பிக்கக் கூடியளவு அவர்களின் மனஉறுதியை வளருங்கள்.

### விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்போது

உங்கள் மகளின் அல்லது மகனின் தொழிற்கல்விக்கான விண்ணப்பங்கள் தொடர்ந்தும் நிரா–கரக்கப்படும் பட்சத்தில் அவர்களின் தொழிற்கல்வி சம்பந்தமான விடயத்தை மீள் பரிசீலணை செய்வது உகந்தது. சிலவேளைகளில் அவர்களின் இலட்சியத் தொழிற்கல்வியை ஒத்த வேறு தொழிற்கல்விகளும் இருக்கலாம். ஆனால் இவை அவர்களின் இலட்சித் தொழிலைப்போல் பிரபல்யம் வாய்ந்தவையாக இல்லாமல் இருக்கலாம். ஆயினும் இவை உங்கள் மகளுக்கு அல்லது மகனிற்குப் பொருத்தமானதாக இருக்கலாம். எனவே தொழிற்கல்வி ஆலோசனை மையங்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் உதவியை நாடுங்கள். அவர்கள் உங்கள் மகளிற்கு அல்லது மகனிற்கு நல்லதோர் தீர்வு கிடைக்கும்வரை உதவுவார்கள்.

### இடைக்காலக்கல்வி

சிலவேளைகளில் உங்கள் மகள் அல்லது மகன் மிகவும் சிரமப்பட்டுத் தொழிற்கல்விகற்கும் நிறுவனங்களைத் தேடியும் அவர்களுக்கு அதற்குரிய இடம் கிடைக்காமல் போகலாம். அல்லது அவர்களின் பாடசாலைத் தரம் குறைவாக இருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் இடைக்காலக் கல்விமுறையொன்றை நீங்கள் தெரிவு செய்யலாம். இக்கல்வி பொதுவாக 1 வருடம் நீடிக்கும். இக்கல்வி உங்கள் பிள்ளைகள் தொழிற்கல்வியுலகில் அடிபதித்து வைக்க அவர்களைத் தயார்படுத்துகின்றது. தொழிற்கல்வி ஆலோசனை மையங்களில் இக்கல்விமுறைபற்றியும் இதற்குரிய கட்டணங்கள் பற்றியும் அறிந்துகொள்ளலாம். இக்கல்விக்குரிய விண்ணப்பங்கள் பெப்ரவரி மாதத்தில் செய்யப்படவேண்டும் என்பதைக் கருத்திற்கொள்ளுங்கள். இதற்கிடையில் உங்கள் மகளிற்கு அல்லது மகனிற்கு ஓர் தொழிற்கல்வி கற்பதற்குரிய நிறுவனத்தின் அனுமதி கிடைத்துவிட்டால் நீங்கள் இக்கல்விக்கெனச் செய்திருந்த விண்ணப்பத்தை இரத்து செய்யலாம்.

.